பதிப்புரிமை ஆசிரியருக்கே / All Rights to Author

# GEOGRAPHY EXAMINATION

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) அலகுப் பரீட்சை - பாறைகளும், மண்ணும்
General Cerificate of Education (Adv. Level) Unit Examination - Rock & Soil

புதிய பாடத்திட்டம்
*New Syllabus*

புவியியல் I,II
Geography I,II

22 T I,II

## பாறைகளும் மண்ணும்

*இரண்டு முப்பது மணித்தியாலம்*
*Two thirty hours*

ஆசிரியர்: திரு.ஏ.கஜன் B.A
077 2400 707 / 076 8044 959

சுட்டெண்: ..............................................

**அறிவுறுத்தல்கள்:**

- இவ் வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது. **பகுதி I, 20** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. **பகுதி I** இற்கான விடைகள் இவ் வினாத்தாளிலேயே எழுதப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வழங்கப்படும்.
- **பென்சிலால் எழுதப்படும் விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- அறிவுறுத்தலுக்கு அமைவாகப் **பகுதி II** வினாக்களுக்கு விடையளிக்குக.

பகுதி I மொத்தப் புள்ளிகள் [ ]

பகுதி II மொத்தப் புள்ளிகள் [ ]

இறுதிப் புள்ளிகள் [ ] 100

A.Kajan

## பகுதி / Part - I

- **1 – 20 வரையான ஒவ்வொரு வினாக்களிலும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து விடையின் இலக்கத்தை அதன் அருகிலுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

**1.** தீப்பாறைகளின் உருவாக்கத்தின் **பிரதான** படிமுறைகளை **ஒழுங்கு முறையில்** தரும் விடை.
**(1)** மக்மாவின் தோற்றம், மக்மாவின் உயர்ச்சி, மக்மாவின் இருக்கை
**(2)** மக்மாவின் இருக்கை, மக்மாவின் தோற்றம், மக்மாவின் உயர்ச்சி
**(3)** மக்மாவின் உயர்ச்சி, மக்மாவின் தோற்றம், மக்மாவின் இருக்கை
**(4)** மக்மாவின் திண்ம நிலை, மக்மாவின் திரவ நிலை, மக்மாவின் வாயு நிலை
**(5)** மக்மாவின் வெப்பநிலை, மக்மாவின் உருகுநிலை **(……)**

**2.** தீப்பாறைகள் உருவாக்கும் மக்மாவைத் தோற்றுவிக்கும் **செயன்முறை** அழைக்கப்படுவது.
**(1)** மக்மா அறை **(2)** கிளர்மின் வீசுகை **(3)** மேற்காவுகை
**(4)** பகுதி உருகுதல் **(5)** மக்மா பரவல் **(……)**

**3.** புவியின் உட்பகுதியில் மக்மா சேமித்து வைக்கப்படுகின்ற **'மக்மா அறை'** காணப்படுவது.
**(1)** கண்ட ஓடு - சமுத்திர ஓடுகளுக்கிடையில்
**(2)** புவியோடு – மேல் மூடியின் கீழ்ப் பகுதிக்கும் இடையில்
**(3)** இடையோடு - கோளவகத்திற்கிடையில்
**(4)** உள் அகணி - வெளி அகணிக்கு இடையில்
**(5)** உட்கோளவகத்தில் **(……)**

**4.** பின்வருவனவற்றுள் பாதாளப் பாறைகளின் (தீப்பாறை) இயல்பாகக் **கொள்ளக்கூடியது.**
**(1)** பாதாளப்பாறையாகப் பெருமளவில் காணப்படுவது கிரனைற் பாறையாகும்
**(2)** கரடுமுரடான பெரிய மணிகளைக் கொண்ட அமைப்புடன் இவை காணப்படும்
**(3)** குவாட்சு, பிளசியோகளேசு, பெல்ஸ்பார் முதலிய கனிமங்களை அதிகளவு கொண்டிருக்கும்
**(4)** இளம் நிறத்தைக் கொண்டு காணப்படும்
**(5)** மேற்கூறிய கூற்றுக்கள் யாவும் சரி **(……)**

**5.** **கிரனைற்** எனும் பாறை உருமாற்றமடைந்து தோன்றுவது.
**(1)** நைஸ் பாறை **(2)** குவாட்சைட் **(3)** சிலேற்று
**(4)** சலவைக்கல் **(5)** நிலக்கரி **(……)**

**6.** பின்வருவனவற்றுள் இரசாயன முறையினால் தோன்றிய அடையற் பாறைகளை **மட்டும்** உள்ளடக்கிய தொகுதி.
**(1)** மணற்கல், மாக்கல், உருண்டைக் கற்றிரள்
**(2)** லிமோனைட், ஜிப்சம், தொலமைட்
**(3)** சுண்ணாம்புக்கல், முருகைக்கல், நிலக்கரி
**(4)** கிரனைற், தயோரைட், ஒக்சியடிசுப் பாறை
**(5)** பெசோல்ட், அல்ரா மூலப்பாறை, தயோரைட் **(……)**

**7.** இலங்கையின் மலைநாட்டில் காணப்படும் **சானோகைற் பாறை** ஒரு,
**(1)** தீப்பாறை **(2)** சேதனவுறு அடையற்பாறை
**(3)** உருமாறிய பாறை **(4)** அசேதனவுறு அடையற்பாறை
**(5)** மேற்கூறிய யாவும் சரி **(……)**

**8.** இலங்கையில் மைக்கா காரியத்தை **அவதானிக்கக்கூடிய** மாகாணமாக **அமையாதது.**
**(1)** மத்திய மாகாணம் **(2)** ஊவா மாகாணம் **(3)** சப்ரகமுவ மாகாணம்
**(4)** வடமத்திய மாகாணம் **(5)** தென்மாகாணம் **(……)**

**9.** **செம்மஞ்சள் பொட்சோல் மண்** பரம்பியிருப்பது.
**(1)** உலர் வலயம் **(2)** ஈர வலயம் **(3)** மலையகம்
**(4)** கரையோரம் **(5)** அரை - வறள் வலயம் **(……)**

**10.** இலங்கையின் பாறை வகைகளில் **'வன்னித் தொகுதி'** எனும் பாறைகள் பரம்பியிருப்பது.
**(1)** உயர்நிலத்தொடர் உருமாறிய பாறைகளுக்கும் மயோசின்கால அடையற்பாறைகளுக்கும் இடையில்
**(2)** விஜயன் தொகுதி - உயர்நிலத்தொடர் பாறைகளுக்கு இடையில்
**(3)** மயோசின் கால அடையல்கள் - பிளைத்தோசின்கால அடையல்களுக்கு இடையில்
**(4)** உயர்நிலத்தொடர் பாறைகளின் வடக்கு - தெற்கு பகுதிகளுக்கு இடையில்
**(5)** மயோசின்கால அடையற்பாறைகளுக்கும் உயர்நிலத்தொடர் பாறைகளுக்கும் இடையில் **(……)**

**11.** முத்துராஜவெல சதுப்புநிலப் பகுதியில் காணப்படும் இலங்கையின் **எரிபொருள் கனியம்.**
**(1)** கனியநெய் **(2)** முற்றா நிலக்கரி **(3)** பெற்றோலியம்
**(4)** நிக்கல் **(5)** இரும்பு **(……)**

**12.** மண் வளத்தை அதிகரிக்கும் செயற்பாடாக **அமையாதது.**
**(1)** நிலத்தைப் புரட்டுதல் **(2)** தரிசாக்கல் **(3)** மூடுபயிர் வளர்த்தல்
**(4)** அறுவடை மீதிகளைப் எரித்துவிடல் **(5)** யாவும் சரி **(……)**

**13.** பின்வருவனவற்றுள் வன் நிறத்தைக் கொண்ட பாறையாக **அமைவது.**
**(1)** தயோரைட் **(2)** சுண்ணாம்புக்கல் **(3)** சோக்குப்பாறை
**(4)** ஒட்டிசியன் **(5)** கப்ரோ **(……)**

**14.** மணற்கல், கரிப், கபிலம் என்பவற்றைக் கொண்டு உருவாக்கம் பெற்ற பாறை வகை.
**(1)** மயோசின் பாறை
**(2)** விஜயன்தொடர் பாறை
**(3)** யுராசிக் பாறை
**(4)** வன்னித்தொகுதிப் பாறை
**(5)** கொண்டலைற் பாறை **(……)**

**15.** இலங்கையில் **கயோலின் களி** காணப்படும் இடம்.
**(1)** வஸ்கமுவ **(2)** தெதியவல **(3)** நாத்தாண்டியா
**(4)** புல்மோட்டை **(5)** போகல **(……)**

**16.** இலங்கையில் **பிரதானமாகக்** காணப்படும் மாணிக்கக்கல் எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?
**(1)** புஸ்பராகம் **(2)** மூடுபனி **(3)** வைடூரியம்
**(4)** பத்மராகம் **(5)** ரூபி **(……)**

**17.** யாழ்ப்பாணக் குடாநாட்டில் மயோசின் காலத்தில் உருவாக்கம் பெற்ற **பிரதான** பாறை வகை.
**(1)** சுண்ணாம்புக்கல் **(2)** சானோகைற் **(3)** குவாட்சைட்
**(4)** மாக்கல் **(5)** சிலேற்று **(……)**

A.Kajan

**18.** இலங்கையில் முதலாவதாக மண் தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட அறிஞர்.

**(1)** பனாப்பொக்கை **(2)** மூவர்மன் **(3)** பேராசிரியர். வாடியா
**(4)** வெக்னர் **(5)** ஜோகிம் **(……)**

**19.** உலகில் **மிகச் சிறந்த** காரியத்தை உற்பத்தி செய்யும் நாடு.

**(1)** ஐக்கிய இராச்சியம் **(2)** தென்கொரியா **(3)** சீனா
**(4)** இந்தியா **(5)** இலங்கை **(……)**

**20.** இலங்கையின் உலர் வலயத்தில் **அதிகம்** காணப்படும் மண் வகை.

**(1)** வண்டல் மண் **(2)** கிரம்சோல் மண் **(3)** உவர்மண்
**(4)** ஈரக்களிமண் **(5)** செங்கபிலநிற மண் **(……)**

## **பகுதி / Part – II**

✹ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**01. 1.** **பாறைகள் (Roks)** என்பதை வரையறுக்குக. **(03 புள்ளிகள்)**

**2.** பிறப்பு **அல்லது** மரபு அடிப்படையில் பாறைகளை வகைப்பாடு செய்க. **(03 புள்ளிகள்)**

**3.** மேலே வினா **இல. 2** இல் உம்மால் வகைப்பாடு செய்யப்பட்ட பாறை வகைகள் யாதேனும் **ஒன்றைத்** தெரிந்தெடுத்து, அதன் உருவாக்கச் செயன்முறைகளை புனையா வரைபட உதவியுடன் விளக்குக. **(06 புள்ளிகள்)**

**4.** பாறை அகழ்வினால் ஏற்படவல்ல பௌதிக ரீதியான **நான்கு** பாதிப்புக்களைப் பொருத்தமான உதாரணங்களின் துணைகொண்டு ஆராய்க. **(08 புள்ளிகள்)**

**02. 1.** மட்படையின் பக்கப்பார்வையை இனங்காட்டவல்ல வரைபடமொன்றை வரைந்து பெயரிடுக. **(03 புள்ளிகள்)**

**2.** மேலே வினா இல. **1** இல் உம்மால் வகைப்பாடு செய்யப்பட்ட மட்படை வகைகளில் யாதேனும் **ஒன்றைத்** தெரிந்தெடுத்து, அதன் சேர்க்கை **மற்றும்** இயல்புகள் பற்றி விளக்குக. **(04 புள்ளிகள்)**

**3.** மண் உருவாக்கத்திற்கு பங்களிக்கும் **நான்கு** பௌதிகக் காரணிகளை எடுத்தாராய்க. **(08 புள்ளிகள்)**

**4.** மட் பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றிச் சுருக்கக் குறிப்பு வரைக. **(05 புள்ளிகள்)**

**03. 1.** **கனியம் (Mineral)** என்பதை வரையறுத்து, நோக்கம் **மற்றும்** இயல்பிற்கு அமைய இலங்கையின் கனியங்களை வகைப்படுத்துக. **(03 புள்ளிகள்)**

**2.** எரிபொருள் கனியங்களின் உச்சளவு பயன்பாடானது இலங்கை உள்ளிட்ட விருத்தியடைந்துவரும் நாடுகளின் **பௌதிக** ரீதியில் ஏற்படுத்திவரும் விரைவான தாக்கங்களைச் சுருக்கமாக விளக்குக. **(06 புள்ளிகள்)**

**3.** இலங்கையின் பொருளாதாரத்தில் கனியவளங்களின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

**4.** இலங்கையின் உலர் வலயத்திற்குரிய எவையேனும் **நான்கு** மண் வகைகளைப் பெயரிட்டு, அவற்றுள் யாதேனும் ஒன்று பற்றிச் சுருக்கமாக விளக்குக. **(05 புள்ளிகள்)**

**04. 1.** இலங்கையின் **பிரதான** கல்லியல் வலயங்களை **(Rock Zone)** அடையாளம் செய்க. **(03 புள்ளிகள்)**

**2.** மேலே வினா **இல. 1** இல் உம்மால் அடையாளம் செய்யப்பட்ட பாறை வலயங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. **(06 புள்ளிகள்)**

**3.** பாறைகளை நிறத்தை அடிப்படையாகக் கொண்டு வகையிடுக. **(03 புள்ளிகள்)**

**4.** நாடுகளின் அபிவிருத்தியில் பாறைகளின் முக்கியத்துவத்தை **நான்கு** காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. **(08 புள்ளிகள்)**

-A.Kajan A.Kajan-

## பகுதி I விடைகள்

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|
| 1 | 1 | 11 | 2 |
| 2 | 4 | 12 | 2 |
| 3 | 2 | 13 | 5 |
| 4 | 5 | 14 | 3 |
| 5 | 1 | 15 | 1 |
| 6 | 2 | 16 | 5 |
| 7 | 3 | 17 | 1 |
| 8 | 5 | 18 | 5 |
| 9 | 2 | 19 | 5 |
| 10 | 5 | 20 | 5 |